Carrier Global Corporation மற்றும் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் (கூட்டாக, "Carrier"), அவற்றின் ஆன்லைன் வேலை விண்ணப்பம் மற்றும் ஆட்சேர்ப்பு முறைகள் மற்றும் Carrier-இல் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்காகத் தனிநபர் ஒருவர் வழங்கக் கூடிய எந்தவொரு தகவலின் தனியுரிமைக்கும் பொறுப்பாகும். பல்வேறு நாடுகளிலும் வேலைக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கும் மறுஆய்வு செய்வதற்கும் Carrier வெவ்வேறு அமைப்பு முறைகளைக் கொண்டுள்ளது. வேலை விண்ணப்பங்களுக்காக Carrier நடைமுறைப்படுத்தியுள்ள மின்னணு அமைப்புகள் மற்றும் ஆன்லைன் அமைப்பை உள்ளடக்காத சில இடங்களில் பயன்படுத்தக் கூடிய செயலாக்கங்கள் ஆகிய இரண்டையும் இந்த வேலை விண்ணப்பதாரரின் தனியுரிமை அறிவிப்பு உள்ளடக்குகிறது. இரு அணுகுமுறைகளுக்கும், நாங்கள் சேகரிக்கக் கூடிய எந்தவொரு தனிப்பட்ட தகவலையும் பாதுகாப்பதற்கான தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் இயற்பியல் ரீதியான நடவடிக்கைகளை Carrier நடைமுறைப்படுத்தியுள்ளது.

Carrier-இல் வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்கத் தனிநபர்களை அனுமதிக்கவும், Carrierஆனது வேலைவாய்ப்பு விண்ணப்பங்களைப் பெறுவதில் பொருந்தக்கூடிய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கும், ஆட்சேர்ப்புக்காக Carrier-இன் ஆன்லைன் வேலை விண்ணப்பமும் வேலைவாய்ப்புகள் வலைத்தளம் உள்ளிட்ட ஆட்சேர்ப்பபு அமைப்புகளும் பயன்படுத்தப்படுகின்றன. Carrier வலை வாய்ப்புகளைப் பார்வையாளர்கள் மதிப்பாய்வு செய்யவும், அநேகமாக அவற்றுக்கு விண்ணப்பிக்கவும் வேண்டும் என்ற நோக்கில் இந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. வேறு ஏதேனும் நோக்கத்திற்காக Carrier-இன் ஆன்லைன் வேலை விண்ணப்பத்தையும் ஆட்சேர்ப்பு அமைப்புகளையும் பயன்படுத்த வேண்டாம்.

வரம்பிட்ட விலக்குகளுடன், குறைந்தபட்சம் 18 வயதான தனிநபர்களின் விண்ணப்பங்களை மட்டுமே Carrier ஏற்றுக்கொள்கிறது. நீங்கள் 18 வயதிற்கு உட்பட்டவராக இருந்தால், பிற வழிகளில் உங்களுக்கும் அறிவுரை கூறப்பட்டு நீங்கள் விண்ணப்பித்தால் அன்றி, ஒரு வேலைக்கு விண்ணப்பிக்கும் நோக்கத்திற்காக உங்கள் தனிப்பட்ட தகவலை Carrier-இடம் வழங்காதீர்கள்.

ஒரு புதுப்பிப்பை வெளியிடுவதன் மூலம் அவ்வப்போது இந்த அறிவிப்புதிருத்தப்படலாம். மாற்றங்கள் எதையும் அறிந்துகொள்வதற்காக வழக்கமான அடிப்படையில் இந்த அறிவிப்பை மறுஆய்வு செய்யும்படி நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.

Carrier

## Carrier என்னென்ன தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கிறது?

Carrier-இன் வேலை ஆன்லைன் விண்ணப்ப அமைப்புகளிலுள்ள பதிவுகளை மதிப்பாய்வு செய்ய, வேலைவாய்ப்புகள் பற்றி Carrier-ஐத் தொடர்பு கொள்ளுங்கள், மேலும் Carrier-இல் உள்ள வேலைக்கு விண்ணப்பியுங்கள், உங்கள் தனிப்பட்ட தகவலை வழங்கும்படி உங்களிடம் கேட்கப்படும். குறிப்பிட்ட சில நாடுகளில் இருக்கும் வேறுபாட்டுடன், அங்கு உங்கள் வேலை உறுதிப்படுத்தப்படும் அல்லது தொடங்கும் போது, இந்தத் தரவுக் கூறுகளில் சில கோரப்படாமல் இருக்கலாம் அல்லது கோரப்படக் கூடும், வழங்குமாறு உங்களிடம் கேட்கப்படக் கூடிய தனிப்பட்ட தகவல்களில் அடங்குபவை:

- பெயர்
- வீட்டு முகவரி, வீட்டுத் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட தொடர்புத் தகவல்
- பிறந்த தேதி
- ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட அரசாங்க அடையாள ஆவணம் அல்லது எண்
- வேலை வரலாறு
- கல்வி
- அந்த ஆவணங்களில் நீங்கள் வழங்கும் தகவல் எதையும் உள்ளடக்கிய சுயவிவரம் அல்லது CV மற்றும்/அல்லது முகப்புக் கடிதம்
- குடியுரிமை மற்றும்/அல்லது நிரந்தர சட்டப்படியான குடியிருப்பு
- குடிவரவு நிலை பற்றிய ஆவணம் உட்பட, பணிபுரிவதற்கான தகுதி
- வேலை வாய்ப்புகளில் ஆர்வம்
- குறிப்பிட்ட வேலைக்கான விண்ணப்பதாரரின் தகுதியுடன் தொடர்புடைய வேலைக்குத் தனித்துவமான கேள்விகள்
- சான்றாதாரங்கள் (மற்ற நபர்களைப் பற்றிய தகவலை நீங்கள் வழங்கினால், Carrierக்கு அவர்களது தரவை வழங்குவதற்கு முன் நீங்கள் அவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்)
- நீங்கள் அரசாங்க நிறுவனத்தில் முன்பு பணியாற்றியுள்ளீர்களா, நீங்கள் அரசாங்க அதிகாரி, Carrier அதிகாரி அல்லது Carrier இயக்குநர் வாரிய உறுப்பினர் போன்றவர்களுடன் தொடர்புள்ளவரா அல்லது நீங்கள் ஒரு தற்போதைய அல்லது முன்னாள் தொழில் வழங்குனருடன் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்குஉட்பட்டுள்ளீர்களா ஆகியவை போன்ற சில நாடுகளின் சட்டப்படி நாங்கள் கேட்கக் கூடிய தகவல்கள்

- நீங்கள் இணையதளத்திற்குத் திரும்பும்போது உங்கள் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்காகப் பாதுகாப்புக் கேள்விகளையும் பதில்களையும் உருவாக்க நீங்கள் வழங்கும் தகவல்
- வேலை வாய்ப்பு பற்றி நீங்கள் அறிந்த இடம்
- உங்கள் விண்ணப்பத்தின் பகுதியாக வழங்குவதற்கு நீங்கள் தேர்வு செய்யக் கூடிய வேறு ஏதேனும் தகவல்
- மூன்றாம் தரப்பினரின் தளம் வழியாக வேலை வாய்ப்புக்கு நீங்கள் விண்ணப்பித்தால், மூன்றாம் தரப்பினரின் தளங்கள் மூலம் வழங்கப்படும் தகவல்

அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் அமெரிக்கப் பிராந்தியங்களில், தனிநபர்களின் இனம், பாலினம், நிபுணத்துவ நிலை மற்றும் ஊனம் குறித்த தகவலைச் சுயமாகவே அடையாளம் காணுமாறும் கூற வேண்டியது Carrier-க்குச் சட்டத் தேவையாகும். அந்தத் தகவல் முற்றிலும் தன்னார்வத்திற்குரியது, மேலும் அந்தத் தகவல்களில் எதையும் வழங்குவது அல்லது நிறுத்துவது என்ற உங்கள் முடிவானது, வேலைக்கு உங்களை எடுத்துக்கொள்ள உங்களை நாங்கள் எவ்வாறு கருதுகிறோம் என்பதைப் பாதிக்காது.

குறிப்பிட்ட வேலைகளுக்கும் குறிப்பிட்ட இடங்களுக்கும், மருத்துவப் பரிசோதனை, கேட்டல்திறன் அல்லது பார்வைத்திறன் சோதனைகள், போதைமருந்துச் சோதனை, பின்னணிச் சோதனை அல்லது குற்றங்கள் பற்றிய முந்தைய வரலாற்றைச் சரிபார்த்தல் ஆகியவற்றைச் செய்யும்படி உங்களிடம் கேட்கப்படலாம். இவை உங்கள் ஒப்புதலுடன் மட்டுமே செய்யப்படும், ஆனால் சில சூழ்நிலைகளில், உங்கள் வேலைவாய்ப்பானதுஇந்தச் சோதனைகளில் ஒன்று அல்லது பலவற்றை வெற்றிகரமாக முடித்திருப்பதைப் பொறுத்திருக்கலாம். குற்றவியல் சார்ந்த வரலாற்றுச் சோதனைகளைச் செய்வது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ள இடங்களில் Carrier அதைச் செய்யாது. உங்களின் கூடுதல் ஒப்புதலைப் பெறாமல், உங்கள்சான்றாதாரங்கள், ஓட்டுநர் உரிமம் மற்றும் பதிவு, கல்வி மற்றும் வேலை வரலாறு போன்ற உங்கள் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவலை Carrier உறுதிப்படுத்தலாம்.

நீங்கள் மொபைல் சாதனத்தில் ஒரு Carrier ஆன்லைன் வேலை விண்ணப்ப அமைப்பை அணுகினால், உங்கள் சாதனத்துடன் தொடர்புகொள்வதற்கு அவசியமான தகவலை வலைத்தளம் சேகரித்து, நீங்கள் கோரக் கூடிய தனிப்பயனாக்கம் எதையும் வழங்கக் கூடும். இந்தத் தகவலில் உங்கள் சாதன அடையாளம் அல்லது எண், உங்கள் தொழில் மற்றும் உங்கள் இருப்பிடம் ஆகியவை அடங்கலாம்.

கூடுதலாக, Carrier அதன் வேலை விண்ணப்ப வலைத்தளங்களில் பயனரின் டொமைன் பெயர், உலாவி வகை, அணுகல் தேதி மற்றும் நேரம் மற்றும் பார்வையிட்ட பக்கங்கள் உட்பட்ட பயனர் போக்குவரத்து வடிவமைப்புகளைக் கண்காணிக்கும். எங்கள் இணையச் சேவையகங்கள் டொமைன் பெயர்களைச் சேகரிக்கின்றன, ஆனால் பார்வையாளர்களின் மின்னஞ்சல் முகவரிகளைச் சேகரிப்பதில்லை. எங்கள் வலைத்தளங்களுக்கு வருகைதந்த பார்வையாளர்களின் எண்ணிக்கையை அளவிடுவதற்கும், வலைத்தளப் பயனர்களால் குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு பயனர்களுக்கு வலைத்தளத்தின் எந்தப் பகுதிகள் பயனுள்ளவையாக இருக்கிறது என்பதைத் தீர்மானிப்பதற்கும் இந்தத் தகவல் சேகரிக்கப்படுகிறது. பயனர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், பயனர் ஆர்வங்களின் அடிப்படையில் உள்ளடக்கத்தை மேலும் சிறப்பாகத் தயாரிப்பதற்கும் Carrier இந்தத் தகவலைப் பயன்படுத்துகிறது.

### Carrier சேகரிக்கும் தனிப்பட்ட தகவலை அது எவ்வாறு பயன்படுத்தக் கூடும்?

சேகரிக்கப்படும் எந்தவொரு தனிப்பட்ட தகவலும் இவற்றுக்காகப் பயன்படுத்தப்படலாம்:

- Carrier-இல் வேலைக்கு விண்ணப்பிக்க மற்றும் தொலைபேசி சோதனை, நேர்காணல்கள் மற்றும் பிற பொருந்தக்கூடிய மதிப்பீடுகளை ஏற்பாடு செய்வது மற்றும் நடத்துவது மட்டுமன்றி இதர வகையிலும் உங்கள் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்ய உங்களை அனுமதிக்க
- இருக்கக்கூடிய அல்லது கிடைக்கக்கூடிய பிற வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்குமாறு மற்றும் உங்களைக் கருதுமாறு உங்களை அழைக்க
- விண்ணப்பம் அல்லது பிற வாய்ப்பு அல்லது மாற்றங்களைக் குறித்து உங்களைத் தொடர்புகொள்ள
- சான்றாதாரம் சரிபார்ப்புகளைச் செல்லுபடியாக்க, பின்னணிச் சோதனைகளைப் பொருத்தமான முறையில் நடத்த மற்றும் மறுக்கப்பட்ட தரப்புச் சோதனையைச் செய்ய
- நீங்கள் பணியமர்த்தப்படுவதற்கு உறுதுணையாக இருப்பது மற்றும் நீங்கள் பணியமர்த்தப்பட்டால் உங்கள் வேலைவாய்ப்பை நிர்வகிக்க
- அரசாங்க நிறுவனங்களுக்கு அறிக்கைகள் வழங்குவது உட்பட வேலை விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட  சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணங்க,
- கருத்துக்கணிப்பு போன்றவை மூலம் உங்கள் அனுபவத்தைப் பற்றிய பின்னூட்டத்தை வழங்க உங்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு

- Carrier-இன் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் புரிந்துகொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் விண்ணப்பதாரர் போக்குகள் குறித்து பகுப்பாய்வு செய்வதற்கும்
- இங்கே பட்டியலிடப்பட்டுள்ள பிற நோக்கங்களில் ஒன்றுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்க
- Carrier-இன் மின்னணு அமைப்புகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அல்லது அதிகரிக்க
- மோசடிக்கு எதிராகப் பாதுகாக்க
- உள் விசாரணைகளை நடத்த மற்றும் சட்டப்பூர்வக் கடமைப்பாடுகளுடன் இணங்க

**Carrier தாம் சேகரிக்கும் தனிப்பட்ட தகவலை யாருடன் பகிர்ந்துகொள்ளும்?**

Carrier ஆனது பின்வருபவற்றைத் தவிர, Carrier குடும்ப நிறுவனங்களுக்கு வெளியே உங்கள் தனிப்பட்ட தகவல்களை விற்கவோ அல்லது பகிர்ந்து கொள்ளவோ மாட்டாது:

- எங்கள் சார்பாகச் சேவைகளைச் செய்வதற்கு Carrier தக்கவைத்துள்ள சேவை வழங்குநர்கள். எங்கள் சார்பாகச் சேவைகளைச் செய்ய அல்லது சட்டப்படியான தேவைகளுடன் இணங்க அவசியமிருந்தால் தவிர, தகவல்களைப் பயன்படுத்த அல்லது வெளிப்படுத்த ஒப்பந்த முறையில் Carrier கட்டுப்படுத்தியுள்ள சேவை வழங்குநர்களுடன் மட்டுமே Carrier உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும்
- சட்ட அமலாக்க அதிகாரிகள் அல்லது பிற அரசாங்க ஒழுங்காற்று அதிகாரிகளிலிருந்து வரும் சட்டப்பூர்வக் கோரிக்கைக்குப் பதிலளிப்பதற்காக, சட்டப்படி அவ்வாறு நாங்கள் செய்ய வேண்டும் என்றால் உட்பட, சட்டப்பூர்வக் கடப்பாடுகளுடன் இணங்க
- சந்தேகப்படும் அல்லது உண்மையான சட்டவிரோத நடவடிக்கைகளை விசாரிக்க
- உடல் தீங்கு அல்லது நிதி இழப்பைத் தடுக்க
- எங்கள் வணிகம் அல்லது சொத்துகள் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை (திவால் உட்பட) விற்பதற்கு அல்லது பரிமாற்றுவதற்கு ஆதரவளிக்க

Carrier அதன் ஆன்லைன் வேலை விண்ணப்ப முறைமைகளில் உதவும் பல சேவை வழங்குநர்களைக் கொண்டுள்ளது. இந்த வழங்குநர்கள் வலைத்தளங்களை நிர்வகிக்கின்றன, மறுபிரதிச் சேமிப்பகத்தை வழங்குகின்றன, வேலை இடுகைகளில் உதவுகின்றன, வீடியோ நேர்காணல்களை இயக்குகின்றனர், விண்ணப்பதாரர்களின்

ஆட்சேர்ப்பை எளிதாக்குகின்றன. Carrier வேறு சேவை வழங்குநர்களையும் பயன்படுத்தலாம், ஆனால் பயன்படுத்தப்படும் எந்தச் சேவை வழங்குநரும் இந்த அறிவிப்பில் அடையாளம் காணப்பட்ட நோக்கங்களுக்காகவே இருக்கும் மற்றும் மேலே குறிப்பிட்டபடி ஒரு ஒப்பந்தத்தின் கீழ் சேவைகளை வழங்கும்.

## Carrier உங்கள் தனிப்பட்ட தகவலை எங்கே சேமிக்கிறது?

Carrier பல நாடுகளில் அமைந்துள்ள உலகளாவிய நிறுவனமாக இருப்பதால், மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, ஒரு சட்டப்பூர்வ நிறுவனத்திலிருந்து மற்றொன்றுக்கு அல்லது ஒரு நாட்டிலிருந்து மற்றொன்றுக்கு நாங்கள் உங்கள் தகவலைப் பரிமாற்றலாம். இந்த நாடுகளில், குறைந்தபட்சம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் நாடுகளில் பல, கனடா மற்றும் இந்தியா போன்ற ஆசியாவில் உள்ள சில நாடுகள் உட்பட பிற நாடுகள் ஆகியவை அடங்கும். உங்கள் தனிப்பட்ட தகவலைப் பொருந்தக்கூடிய சட்டரீதியான தேவைகள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காகத் தேவைப்படும் அளவுக்கு மட்டுமே பரிமாற்றுவோம்.

எல்லைகளைக் கடந்து தனிப்பட்ட தகவல்களைச் சட்டப்பூர்வமாகப் பரிமாற்றுவதைச் செயல்படுத்துவதற்காக உள்ள சட்ட முறைமைகளை Carrier சார்ந்திருக்கிறது. பரிமாற்றத்தை அங்கீகரிக்க, தரநிலையான ஒப்பந்தச் சரத்துகள் (மாதிரிச் சரத்துகள் என்றும் அழைக்கப்படுகிறது) அல்லது கட்டுப்படுத்தும் பெருநிறுவன விதிகளை Carrier நம்பியிருக்கும் அளவிற்கு, அந்தத் தேவைகளுக்கும் இந்த அறிவிப்புக்கும் இடையில் ஒரு முரண்பாடு இருக்கக்கூடிய இடம் உட்பட, Carrier ஆனது அந்தத் தேவைகளுக்கு இணக்கமாக நடந்துகொள்ளும்.

## Carrier உங்கள் தனிப்பட்ட தகவலை எவ்வளவு காலத்திற்கு வைத்திருக்கிறது?

தேர்ச்சி பெறாத விண்ணப்பதாரர்களுக்காக, சட்டம் அல்லது ஒழுங்குமுறை, நீதிமன்றம், நிர்வாக அல்லது தீர்ப்பாய நடவடிக்கை எடுத்தல் அல்லது தணிக்கைத் தேவை போன்றவற்றுக்குத் தேவை என்றால் தவிர, கடைசிச் செயல்பாட்டை மேற்கொண்ட தேதியிலிருந்து அதிகபட்சமாக மூன்று ஆண்டுகள் வரை, உங்கள் விண்ணப்பத் தகவல்களை Carrier தக்கவைத்துக்கொள்ளும். தேர்ச்சி பெற்ற

விண்ணப்பதாரர்களுக்காக, பணியாளர் தனியுரிமை அறிவிப்புக்கு இணங்க உங்கள் தகவல்களை Carrier தக்கவைத்துக்கொள்ளும்.

நீங்கள் உங்கள் தனிப்பட்ட தகவலைப் புதுப்பிக்க, திருத்த அல்லது நீக்க விரும்பினால், carrier.recruiting@carrier.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். பொருந்தக்கூடிய சட்டம் அல்லது ஒழுங்குமுறை, நீதிமன்றம், நிர்வாக அல்லது தீர்ப்பாய நடவடிக்கை அல்லது தணிக்கைத் தேவை போன்றவை நீக்கத்தைத் தடுத்தால் அன்றி, Carrier உங்கள் தனிப்பட்ட தகவல்களை ஒரு நியாயமான காலத்திற்குள் நீக்கிவிட்டு, உங்கள் பெயர், உங்கள் நீக்கும் கோரிக்கையின் தேதி, நீங்கள் விண்ணப்பித்த வேலை(கள்) மற்றும் நீங்கள் எந்த நாட்டிலிருந்து விண்ணப்பித்தீர்கள் போன்ற தகவல்களின் ஒரு பதிவை மட்டும் வைத்திருக்கும். Carrierஉங்கள் கோரிக்கையுடன் இணங்கியிருக்கிறது என்பதை நிரூபிக்க இந்தத் தகவலை வைத்திருக்கிறது.

தக்கவைப்புக் காலங்களுக்கு அப்பாலும் நீக்குமாறு கோரிய விண்ணப்பதாரர்களுக்கும், Carrier அதன் ஆட்சேர்ப்பு நடைமுறைகளைப் புரிந்து கொள்வதற்கும், மேம்படுத்துவதற்குமாகப் புள்ளிவிவர நோக்கங்களுக்கான அநாமதேயத் தரவுகளைத் தக்கவைத்துக் கொள்ளக் கூடும்.

## Carrier உங்கள் தனிப்பட்ட தகவலை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைப் பற்றி உங்களுக்கு என்னென்ன தேர்வுகள் உள்ளன?

Carrier-க்கு உங்கள் தனிப்பட்ட தகவல்களை வழங்கலாமா இல்லையா என்பதைப் பற்றிய முடிவை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம், ஆனால் உங்கள் தகவலை வழங்குவதில்லை என்று நீங்கள் முடிவெடுத்தால், Carrier உங்களை பணியமர்த்தக் கருத்தில் கொள்ளாது. நீங்கள் விண்ணப்பிக்கக்கூடிய பதவிக்கு உங்கள் தகுதியை மதிப்பீடு செய்யவும், எங்கள் ஆன்லைன் விண்ணப்ப அமைப்புகளில் நீங்கள் உள்நுழையும்போது உங்களை அங்கீகரிக்கவும் மற்றும் பொருந்தக்கூடிய சட்டத்தின்படி தேவைப்படும்போதும் Carrier-க்குத் தேவைப்படும் தகவல்களை மட்டுமே அது கேட்கிறது.

## Carrier எவ்வாறு குக்கீகள் அல்லது பிற கண்காணிப்புத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது?

குக்கீகள் என்பவை பயனர்களின் கணினிகளுக்கு அனுப்பப்பட்டு, சேமிக்கப்படும் சிறிய உரைக் கோப்புகள் ஆகும். அவை மீண்டும் வரும் பயனர்களை அடையாளங்காணவும், வலைத்தளங்களைப் பயனர்கள் அணுக உதவிபுரியவும் வலைத்தளங்களை அனுமதிக்கின்றன, மேலும் உள்ளடக்க மேம்பாடுகளை அனுமதிக்கும் ஒட்டுமொத்தத் தரவைத் தொகுக்க வலைத்தளங்களை அனுமதிக்கும். குக்கீகள் பயனர்களின் கணினிகள் அல்லது கோப்புகளைப் பாதிக்காது. வெப் பீக்கான்கள் என்பவை வெளிப்படையான கிராஃபிக் படங்கள், இவை பெரும்பாலும் ஒற்றை பிக்சலின் அளவுடையவை, வலைத்தளங்களைத் தளத்தில் நடக்கும் செயல்பாட்டைக் கண்காணிக்க அனுமதிக்கும்.

Carrier தமது வலைத்தளத்தின் செயல்திறனை மேம்படுத்தக்கூடிய வகையில், ஒட்டுமொத்த மற்றும் அநாமதேய பயன்பாட்டுத் தரவைச் சேகரிப்பதற்கு வேலைவாய்ப்பு வலைத்தளங்கள் மற்றும் பிற Carrier வேலை இடுகைகளில் குக்கீகள் மற்றும் வெப் பீக்கான்களை Carrier பயன்படுத்துகிறது. உங்கள் பயனர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும்கூட குக்கீகளை Carrier பயன்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, மொழி மற்றும்/அல்லது புவியியல் இருப்பிட விருப்பம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதற்கு வலைத்தளம் உங்களை அனுமதிக்கலாம், இது எதிர்கால வருகைகளுக்காகச் சேமிக்கப்படும்.

Carrier-இன் சேவை வழங்குநர்களிடமிருந்து கிடைக்கும் குக்கீகளையும் இந்த வேலை இடுகையிடும் வலைத்தளங்கள் பயன்படுத்துகின்றன. அமர்வின் போது உங்கள் செயல்பாட்டை நிர்வகிப்பதற்காக இந்தக் குக்கீகள் ஓர் அமர்வு ID எண்ணைக் கொண்டுள்ளன. வெளிப்புற இடுகைகளின் செயல்திறனைக் கண்காணிப்பதற்காக நீங்கள் வெளிப்புற வலைத்தளத்திலிருந்து இந்த வலைத்தளத்திற்கு வழிச்செலுத்தினீர்களா என்பதைத் தீர்மானிக்கவும் குக்கீகளை எங்கள் சேவை வழங்குநர்கள் பயன்படுத்துகின்றனர்.

இந்த அல்லது வேறு ஏதேனும் Carrier வலைத்தளம் மூலம் குக்கீகள் அணுகப்படுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், குக்கீகளின் பயன்பாட்டை மறுக்க அல்லது முடக்க உங்கள் உலாவி நிரலில் உள்ள அமைப்புகளைச் சரிசெய்ய வேண்டும். குக்கீகள் மற்றும் வெப் பீக்கான்கள் பற்றிய கூடுதல் தகவலை http://www.allaboutcookies.org/ என்ற இணையதளத்தில் காணலாம்.

**இந்த வலைத்தளத்தில் தோன்றக்கூடிய மூன்றாம் தரப்பு இணைப்புகளைப் பற்றி நீங்கள் என்ன புரிந்து கொள்ள வேண்டும்?**

சில சந்தர்ப்பங்களில், Carrier அல்லாத கட்டுப்படுத்தப்பட்ட வலைத்தளங்களுக்கான இணைப்புகளை Carrier வழங்கலாம் இதில் Carrier இத்தகையவற்றை கண்டறிய நியமான முயற்சிகளை மேற்கொள்ளும். Carrier அத்தகைய மூன்றாம் தரப்பு வலைத்தளங்களைக் கட்டுப்படுத்தாது, இருப்பினும், மேலும் பிற வலைத்தளங்களால் வழங்கப்படும் உள்ளடக்கம் அல்லது தனியுரிமை நடைமுறைகளுக்குப் பொறுப்பாக முடியாது.மேலும், இந்த அறிவிப்பு மூன்றாம் தரப்பினரால் உங்களைப் பற்றிச் சேகரிக்கப்பட்ட தகவல்களைகட்டுப்படுத்தாது.

**குறிப்பிட்ட பயனர்களுக்கு என்னென்ன கூடுதல் தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும்?**

**கலிஃபோர்னிய** குடியிருப்பாளர்களுக்கு கலிஃபோர்னிய நுகர்வோர் தனியுரிமைச் சட்டத்தின் (சி.சி.பீ.ஏ)(CCPA) கீழ் உரிமைகள் உள்ளன, இது ஜனவரி 1, 2020 முதல் நடைமுறைக்கு வருகிறது, இதில் பின்வரும் உரிமைகளும் உள்ளடங்கும்:

- தனிநபர் தகவல்கள் எவ்வாறு சேகரிக்கப்பட்டன உள்ளிட்ட நாங்கள் சேகரித்த பயன்படுத்திய உங்கள் தனிநபர் தகவல்களின் வகைகளைத் தெரிந்துகொள்ளுதல்;
- எந்த வகையான தனிநபர் தகவல்கள் விற்கப்பட்டன அல்லது வெளியிடப்பட்டன மற்றும் விற்கப்பட்டாலோ அல்லது வெளியிடப்பட்டாலோ, மூன்றாம் தரப்பினார்கள் அதைப் பெறும் வகைகளையும் தெரிந்துகொள்ளுதல்;
- உங்களைப் பற்றி சேகரித்த தனிப்பட்ட தகவல்களை அணுகல்; மற்றும்
- உங்கள் தனிப்பட்ட தகவல்களை நீக்க கோருதல்.

CCPA-யின் கீழே வரும் உரிமைகளைப் பயன்படுத்தும் கோருதல்கள் Carrier-யின் சரிபார்ப்பு மற்றும் CCPA-யின் கீழ் குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டவையாகும். கலிஃபோர்னியா குடியிருப்பாளர்கள் தங்களுக்கு பொருந்தக்கூடிய எந்தவொரு CCPA உரிமைகளையும் பயன்படுத்தியதற்காக Carrier எந்தவித பாகுபாடும் காட்டாது.

கலிஃபோர்னியா குடியிருப்பாளர்கள் CCPA இன் கீழ் தங்கள் தனிப்பட்ட தகவல்களை விற்பதைத் தவிர்ப்பதற்கு உரிமை உண்டு, Carrier தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்பினருக்கு விற்காது. எங்கள் நடைமுறைகள் மாறினால், இந்த தனியுரிமை

அறிவிப்பை நாங்கள் புதுப்பித்து, பொருந்தக்கூடிய சட்டத்திற்கு இணங்க தேவையான எந்த நடவடிக்கையும் எடுப்போம்.
CCPA உரிமைகளைப் பயன்படுத்த விரும்பும் கலிஃபோர்னியா குடியிருப்பாளர்கள் Carrier-ஐ **privacy@carrier.com** யிலோ அல்லது இணைய படிவத்தை பயன்படுத்தியோ தொடர்பு கொள்ளலாம்; உங்கள் கோரலின் தலைப்பில் “கலிஃபோர்னியா தனியுரிமை உரிமைகள்” என்று எழுதவும் மற்றும் உங்கள் கோரலின் தன்மையையும் விவரிக்கவும். CCPA குறித்து நீங்கள் Carrier-ஐ 1-833-617-0050 என்ற எண்ணிலும் அழைக்கலாம்.

கலிஃபோர்னியாவின் "Shine the Light Law" மூலம் வரையறுத்தபடி **கலிஃபோர்னிய குடியிருப்பாளர்கள்**ஆண்டுதோறும் முந்தைய நாட்காட்டி ஆண்டு காலத்திற்குள் தமது சொந்த நேரடிச் சந்தைப்படுத்தல் பயன்பாட்டிற்காகப் பிற வணிகங்களுடன் பகிர்ந்து கொண்ட தகவல்களை கோரலாம் மற்றும் பெறலாம் (). Carrier உங்கள் தனிப்பட்ட தகவலை மற்ற வணிகங்களுடன் தங்களது சொந்த நேரடி விற்பனைக்காகப் பகிராது.

**தனியுரிமைச் சட்டங்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய மற்றும் பிற நாடுகளின் பயனர்கள்:** உங்களுடைய தேசிய அல்லது மாநிலத் தரவுப் பாதுகாப்பு ஆணையத்திடம் புகாரளிக்க உங்களுக்கு உரிமை உள்ளது, இது ஒரு மேற்பார்வை ஆணையமாகவும் அறியப்படலாம். மேலும், உங்களுக்கு ஒப்புதலைத் திருப்பி பெற, உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகுவதற்கும் திருத்தம் செய்ய அல்லது அழிப்பதற்கும் கோர,சில தனிப்பட்ட தகவல்கள் மீதான கட்டுப்பாடுகளை எதிர்பார்க்க அல்லதுஅவற்றின் செயலாக்கத்தை ஆட்சேபிக்க மற்றும் சில சூழ்நிலைகளில் தரவு பெயர்வுத்திறனை எதிர்பார்க்க உரிமை உள்ளது. கட்டுப்பாடுகள் அல்லது பெயர்வுதிறனை அணுகும், திருத்தும், அழிக்கும், ஆட்சேபிக்கும் அல்லது நாடும் ஏதேனும் கோரிக்கக்கு, கீழேயுள்ள தொடர்பு முறைகளைப் பயன்படுத்தி Carrier-ஐ தொடர்புகொள்ளுங்கள்.

**அமெரிக்க பயனர்கள்:** Carrier www.corporate carrier.com. மூலமாக சமூக பாதுகாப்பு எண்களைச் சேகரிக்காது. இருப்பினும் Carrier அதன் ஊழியர்களுக்கான வரி மற்றும் ஊதிய நோக்கங்கள் போன்றவற்றிற்காக சமூகப் பாதுகாப்பு எண்களை, சட்டத்தால் தேவைப்படும் பட்சத்தில் சேகரிக்கிறது. Carrier சமூகப் பாதுகாப்பு எண்களைச் சேகரிக்கும்போது மற்றும்/அல்லது பயன்படுத்தும்போது, இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல், அறிய வேண்டிய தேவை அடிப்படையில் அணுகலை உறுதி செய்து, சேகரிப்பைக் கட்டுப்படுத்துதல், பொருத்தமான தொழில்நுட்பப் பாதுகாப்புகளையும்

முறையான அகற்றுதலை உறுதி செய்வதன் மூலம் Carrier சரியான கவனிப்பை மேற்கொள்ளும்.

**நீங்கள் உங்கள் தனிப்பட்ட தகவலை எவ்வாறு திருத்தலாம் அல்லது மாற்றலாம்?**

Carrier-இன் ஆன்லைன் வேலை விண்ணப்ப அமைப்புகளில் ஒன்றிலுள்ள உங்கள் தகவலை மாற்ற, நீங்கள் உங்கள் சுயவிவரத்தில் உள்நுழைந்து, தேவைப்படும் திருத்தங்கள் அல்லது நீக்கங்களைச் செய்யலாம். நீங்கள் வேறொரு முறையில் (மின்னஞ்சல் போன்றவை) ஒரு வேலைக்கு விண்ணப்பித்திருந்தால், உங்கள் உள்ளூர் ஆட்சேர்ப்புத் தொடர்பாளரைத் தொடர்புகொள்ளவும். வேலைவாய்ப்புகள் வலைத்தளத்துடனான பிரச்சனைகளைப் புகாரளிக்க அல்லது கேள்விகள் அல்லது கருத்துக்களைத் தெரிவிக்க, carrier.recruiting@carrier.com. என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**Carrier உடன் எப்படித் தொடர்பு கொள்ள முடியும்?**

உங்கள் தனிப்பட்ட தகவலை அணுக, திருத்த அல்லது புதுப்பிக்க விரும்பினாலோ அல்லது Carrier-யின் பொதுவான தனியுரிமை நடவடிக்கைகள் குறித்து கேள்விகள் அல்லது புகார்கள் இருந்தாலோ அல்லது குறிப்பிட்ட Carrier நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட தரவுப் பாதுகாப்பு அலுவலரைத் தொடர்புகொள்ள விரும்பினாலோ, privacy@carrier.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

உங்களுக்கு ஏதேனும் கருத்துகள் அல்லது கேள்விகள் இருந்தாலோ, Carrier-இன் வேலைவாய்ப்பு வலைத்தளங்கள் அல்லது அமைப்புகளின் மதிப்பினை உயர்த்துவதற்காக நாங்கள் செய்யக் கூடிய வேறு விஷயங்கள் இருந்தாலோ, தயவுசெய்து, carrier.recruiting@carrier.com.– என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

கடைசியாகப் புதுப்பிக்கப்பட்டது: மார்ச் 06,2020